**கல்வி அமைச்சு.**
**தேசிய மொழிகள் மற்றும் மானிடவியல் பிரிவு.**
**க. பொ.த. ( சாதாரண / தரம் ) மாதிரி வினாப்பத்திரம் - 2016**
**குடியுரிமைக்கல்வி (62)**
**வினாப்பத்திரம் -1**

**நேரம் : 1 மணி.**

**கவனிக்க வேண்டியவை:**

- **சகல வினாக்களுக்கும் விடை தருக.**
- **சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **பரீட்சையின் போது விடையளிப்பதற்கான பல்தேர்வு விடைப்பத்திரம் வழங்கப்படும்.**

1. கிரீஸின் எதென்ஸ் நகராட்சியின் பிரதான நிர்வாக நிறுவனமாக இருந்தது.

   1. மக்கள் சபை  2. சட்டசபை
   3. அதிகார சபை  4. அரச சபை

2. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இந்தியாவில் குழுவாட்சி முறை நடந்த குடியேற்ற அரசானது

   1. மகதம்  2. கோசல
   3. வஜ்ஜி  4. அவந்தி

3. அரசின் பிரதான பண்புகளை மாத்திரம் கொண்ட விடையாவது

   1. நிலம் - சனத்தொகை – அரசாங்கம் - தன்னாதிக்கம்
   2 . நிலம் - அரசாங்கம் -அரசியல் கட்சிகள் - தன்னாதிக்கம்
   3 . நிலம் -அரசியலமைப்பு - நிறைவேற்று அதிகாரம் - நீதித்துறை
   4. நிலம் -அரசியலமைப்பு - சனத்தொகை – அரசாங்கம்

4. இலங்கையின் வட பிரதேச புகையிரத வீதி அபிவிருத்திக்காக வெளிநாட்டு உதவி வழங்கிய நாடு

   1. அமெரிக்கா ஐக்கிய குடியரசு  2. இந்தியா
   3. பிரித்தானியா  4. யப்பான்

5. 1945 இல் ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கைகள் அங்கிகரிக்கப்பட்ட மகாநாடு ஆவது.

   1. லொஸ் என்சல்ஸ்  2. வொஷிங்டன்
   3. நியுயோர்க்  4. சான் பிரான்சிஸ்கோ

6. சனநாயக சமூகமொன்றில் பிரசை என்ற வகையில் சமூகத்திற்கு செய்ய வேண்டிய கடமையாவது.

   1. அரச நிதி நிர்வாகத்தின் போது வெளிப்படையாக நடந்து கொள்வது
   2. சுற்றாடலைப் பேணிப் பாதுகாத்தலாகும்.
   3. சுதந்திரமாக சிந்தித்தலும் கருததுக்களை எடுத்துரைத்தலும்
   4. சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாத்தல்

7. இலங்கையின் தேர்தல் தொகுதிகளை பிரித்து வேறுபடுத்துவதற்காக பயன்படுத்துகின்ற பிரதான நியதிகளாவன.

1. நிலமும் பொருளாதாரமும்
2. நிலமும் சனத்தொகையும்
3. சனத்தொகையும் பொருளாதாரமும்
4. பொருளாதாரமும் சமூக நிலைமையும்

8. கூட்டாட்சியின் பிரதான பண்புகளுள் ஒன்று.

1. மத்திய அரசு போன்றே அரசுகளுக்கான அதிகாரங்கள் அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளமை.
2. மத்திய அரசின் அரசியலமைப்பினூடாக நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் மூலம் மாத்திரம் நிர்வாக அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்பட்டிருத்தல்.
3. அரசிற்குரிய அரசியலமைப்பு நிறைவேற்று மற்றும் நீதித்துறை அதிகாரங்கள் ஒரு மத்திய அரசினால் மாத்திரம் நடைமுறைப்படுத்தல்.
4. மத்திய அரசிற்கு தேவைப்படும் எச்சந்தர்ப்பத்திலும் பன்முகப்படுத்தப்பட்ட நிர்வாக அதிகாரங்களை மீள பெற இயலுமாதல்.

9. இலங்கையில் மாகாண ஆளுனர்கள் நியமிக்கப்படுவது.

1. பிரதம மந்திரியால்
2. மாகாண முதலமைச்சரால்
3. மாகாண சபை அமைச்சர்களால்
4. சனாதிபதியால்.

10. இலங்கையில் அதிகமான மாவட்டங்களை கொண்ட மாகாண சபையாவது.

1. வட மத்திய மாகாண சபை
2. வட மாகாண சபை
3. வடமேல் மாகாண சபை
4. கிழக்கு மாகாண சபை

11. மத்திய அரசினாலும் மாகாண சபையினாலும் சமமாக அனுபவிக்கக்கூடிய அதிகாரங்களைக் கொண்ட நிரல் எப்பெயரால் அழைக்கப்படும்.

1. மாகாண சபை பட்டியல்
2. இணைப்பட்டியல்
3. மத்திய அரசுப் பட்டியல்
4. முதலாவது பட்டியல்

12. பன்மைப் பண்பாட்டுச் சமூக மக்கள் ஒற்றுமையாக செயற்படுவதால்

1. தேசிய ஒற்றுமையும் சகவாழ்வும் விருத்தியடையும்.
2. போட்டி மனப்பான்மை தோன்றும்
3. கலாசார எழுச்சி ஏற்படும்
4. சனநாயகம் உறுதியாவதற்கு தடையாகும்.

13. பன்மைப் பண்பாட்டு சமுதாயமுள்ள ஒரு நாட்டில் வாழ்கின்ற மக்களுக்கு மிகப் பொருத்தமாவது.

1. ஒரு மொழியில் நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடியதாயிருத்தல்
2. பல மொழிகளை பேசக்கூடியதாயிருத்தல்
3. பல மொழிகளைப் பற்றி அறிந்திருத்தல்
4. ஒரு மொழியைப்பற்றி அறிந்திருத்தல்

14. பரந்து கிடக்கும் உற்பத்தி சாதனங்களை ஒன்று திரட்டி உற்பத்திச் செயற்பாடுகளுக்காக ஒழுங்கமைக்கும் செயலைக் குறிப்பதானது

1. உற்பத்தி
2. திட்டமிடல்
3. முயற்சியாண்மை
4. முகாமைத்துவம்

15. பின்வரும் நாடுகளுள் சமதர்ம பொருளாதார முறை காணப்படும் நாடானது

1. கியூபா
2. அவுஸ்திரேலியா
3. இந்தியா
4. யப்பான்

16. பொருளாதார வளங்களை எதிர்கால சமூதாயத்திற்காக பாதுகாத்து தற்கால தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளல் எவ்வாறு அழைக்கப்படும் ?

1. பொருளாதார அபிவிருத்தி
2. நாட்டின் அபிவிருத்தி
3. கலாச்சார அபிவிருத்தி
4. சமூக அபிவிருத்தி

17. முரண்பாடுகளை நீக்குவதற்காக பயன்படுத்தப்படும் சம்பிரதாய முறையாவது

1. தீர்ப்புக் கூறல்
2. ஆலோசனைக் கூறல்
3. பேரம் பேசுதல்
4. நடுநிலையாளராக செயற்படல்

18. தேச எல்லைக்கான மோதலுக்கு உதாரணமாக அமைவது
1. ருவண்டாவில் முட்சி , ஹூடு இனக் குழுக்களுக்கிடையிலான மோதல்
2. மேற்குலக முதலாளித்துவத்திற்கும் சோவியத் நாட்டிற்கும் இடையிலான மோதல்
3. இஸ்ரேல் பலஸ்தீன மோதல்
4. மத்திய கிழக்கு நாடுகளுக்கிடையிலான மோதல்

19. மோதல்களை சமாதானமாக தீர்த்துக் கொள்வதனால் ஏற்படும் நன்மையல்லாதது ?
1. உயிர்ச் சேதங்களை தடுத்தல்
2. அரசியல் தளம்பல் நிலை .
3. நாட்டு மக்களின் சுய கௌரவத்தை பாதுகாத்தல்
4. பொருளாதார உறுதிப்பாடு

20. நவீன அரசுகளின் அதிகாரப் பகிர்வின் போது கவனிக்க வேண்டிய முக்கிய காரணியாக அமைவது.
1. வளங்களின் சமபங்கீட்டின்மை
2. பிரதேசத் தலைவர்களை உருவாக்குதல்
3. சிறு இராச்சியங்களின் நிர்வாகத்தை இலகுபடுத்தல்
4. இனக்குழுக்களின் வேண்டுகோள்கள்

21. சர்வதேச மோதல்களை வகைப்படுத்தும் இரு பிரதான பிரிவுகளாவன.
1. பொருளாதார ,சமூக முரண்பாடுகள்
2. சமய , இனவாத முரண்பாடுகள்
111. கருத்து நிலை, யுத்த நிலை முரண்பாடுகள்
4. அரசியல் , இனப்பாகுபாட்டு முரண்பாடுகள்

22. தற்போது இலங்கையில் நடைமுறையிலுள்ள பொது சட்டமாவது
1. உரோம டச்சுச் (ஒல்லாந்த) சட்டம்
2. மலை நாட்டுச் சட்டம்
3. தேச வழமைச் சட்டம்
4. முஸ்லிம் சட்டம்

23. 1973 ஆம் ஆண்டு நீதியை நிலைநாட்டுவதற்கான சட்டமூலத்திற்கு அமைவாக இலங்கையின் முதல் நீதி மன்றமாக அமைவது
1. மேன்முறையீட்டு நீதி மன்றம்
2. மேல் நீதி மன்றம்
3. மாவட்ட நீதி மன்றம்
4. உச்ச நீதி மன்றம்

24. இலங்கையில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நியமிக்கப்படுவது
1. நீதி அமைச்சின் செயலாளரினால்
2. சனாதிபதியினால்
3. சட்டமா அதிபரினால்
4. பிரதம நீதியரசரினால்

25. பாராளுமன்ற தேர்தல் முறையீடுகளை விசாரணை செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நிறுவனமாவது
1. உச்ச நீதி மன்றம்
2. மேன் முறையீட்டு நீதி மன்றம்
3. மாவட்ட நீதி மன்றம்
4. நீதிவான் நீதி மன்றம்

26. வெளிநாட்டு வர்த்தகத்துடன் தொடர்புபட்ட சர்வதேச நிறுவனமாவது
1. உங்டாட்
2. சார்க்
3. யுனெஸ்கோ
4. யுனிசெப்

27. கீழே தரப்பட்டுள்ள டொனமூர் அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கான விடையாக அமைவது
A. நிறைவேற்றுச் அதிகார சபை முறை
B. சட்டவாக்கக் கழகம் உருவாக்கப்பட்டமை
C. வரையறுக்கப்பட்ட வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டமை.
D. அரச சபை அறிமுகப்படுத்தப்பட்டமை.

1. A யும் D யும்
2. A யும் B யும்
3. B யும் D யும்
4. C யும் B யும்

28. சட்டவாக்கம் எனும் பாராளுமன்றத்திற்குரிய கருமங்களாவன.
1. அரச சேவையை நிர்வகித்தல்
2. வரவு செலவினைக் நிர்வகித்தல்.
3. அரசியல் யாப்பினை பாதுகாத்தல்.
4. அரச நிதியை நிர்வகித்தல்.

29. பிரசைகளுக்கான அரசின் பல்வேறு படிநிலைகளில் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்களை உள்ளடக்கிய விடையாக அமைவது.

1. பொறுப்புடனும் முறையாகவும் குப்பைகளை அகற்றல்
2. சட்டத்தையும் சமாதானத்தையும் நிலைநாட்டலும் பாதுகாத்தலும்
3. வீடமைப்புத் திட்டங்களை தயாரித்தலும் நிருவகித்தலும்
4. பொது சுகாதாரச் சேவையை நடைமுறைப்புடுத்தலும் மேம்படுத்தலும்

30. "ஒருவரின் கைத்தடியை இன்னுமொரவரின் மூக்கு நுனியை மட்டுமே சுழற்றிக் கொண்டு செல்ல முடியும்.. இக்கூற்றினால் விளங்கப்படுவது.

1. உரிமைகளை அனுபவிக்கும் போது எல்லைகளுக்குள் கட்டுப்பட வேண்டுமென்பதாகும்.
2. உரிமைகள் சமமாக கிடைக்கவேண்டுமென்பதாகும்.
3. விரும்பிய வகையில் உரிமைகளை அனுபவிக்க முடியுமென்பதாகும்.
4. சமூகத்தினால் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதாகும்.

31. உங்கள் பாடசாலையில் 3R எண்ணக்கருவை செயல்படுத்துவதால் கிடைக்கக்கூடிய பயன்களாவன.

1. நல்லிணக்கமும் ஒற்றுமையும் விருத்தியடையும்
2. பாடசாலை மனித வளம் விருத்தியடையும்
3. பாடசாலை பௌதிக வளம் விருத்தியடையும்
4. பாடசாலை வளங்களின் விளைதிறனும் வினைத்திறனும் விருத்தியடையும்.

32. சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்படுவதற்கான முக்கிய காரணியாக அமைவது

1. சூழலின் பால் முறையற்ற முறையில் கழிவுகளை அகற்றுவது
2. சூழல் வளங்களை வரையறையற்ற வகையில் பயன்படுத்துவது
3. சூழல் பாதுகாப்பு தொடர்பாகக் கவனம் செலுத்தாமை
4. கைத்தொழில் மயமாக்கல் மூலம் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தல்.

33. அபிவிருத்தி அடைந்த நாடுகளைமாத்திரம் கொண்ட தொகுதியாவது

1. கனடா, சீனா, பாகிஸ்தான், இந்தியா
2. சுவிடன், சீனா, பெல்ஜியம், சிங்கப்பூர்
3. கனடா, அவுஸ்திரேலியா, சுவீடன், நோர்வே
4. யப்பான், ஜேர்மனி, இஸ்ரேல், எகிப்து

34. ஒரு நாட்டின் அபிவிருத்தியை அளவிடுவதற்காக பயன்படுத்தும் நவீன அளவீட்டை மாத்திரம் உள்ளடக்கிய விடையாவது.

1. பௌதிக வாழ்கைப் பண்புச் சுட்டெண், மனித அபிவிருத்திச் சுட்டெண், மனித வறுமைச் சுட்டெண், கணனி அறிவு வீதம்
2. மனித வறுமைச் சுட்டெண், மொத்தத் தேசிய உற்பத்தி, தேறிய மொத்தத் தேசிய உற்பத்தி, தொலைபேசி அடர்த்தி
3. மனித அமுக்கச் சுட்டெண், பன்முக வறுமைச் சுட்டெண், பொருளாதார அபிவிருத்தி வேகம், இணையத்தள பாவனை
4. மனித அபிவிருத்திச் சுட்டெண், பசுமை மொத்தத் தேசிய உற்பத்தி, மனித அமுக்கச் சுட்டெண், தலா மொத்தத் தேசிய உற்பத்தி

35. அபிவிருத்தி அடைந்து வரும் நாடென்ற வகையில் ஏனைய அத்தகைய நாடுகளுக்கு ஒப்பீட்டளவில் இலங்கையில் காணக்கூடிய விசேடத்துவமாவது.

1. ஆயுள் எதிர்பார்ப்பு குறைந்த மட்டத்தில் நிலவுகின்றமை.
2. எழுத்தறிவு வீதம் உயர்மட்டத்தில் நிலவுகின்றமை.
3. சிசு மற்றும் கர்பிணித் தாய்மாரின் இறப்புவீதம் உயர்மட்டத்தில் நிலவுகின்றமை.
4. வருமானப் பகிர்வு இடைவெளி குறைந்துள்ளமை.

36. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பிரதான நிர்வாக நிறுவனமாவது

1. சர்வதேச நீதிமன்றம்
2. நம்பிக்கை பொறுப்புச் சபை.
3. பாதுகாப்புச் சபை .
4. பொதுச் செயலாளரின் செயலகம்.

37. தெற்காசிய தீர்வு வியாபார ஒப்பந்தத்தில் SAPTA பிரதான நோக்கங்களுள் ஒன்றாவது.

1. சிரமச் சந்தைக்கான வாய்ப்பக்களை விரிவுபடுத்தல் / அதிகரித்தல்.
2. வலய நாடுகளின் உற்பத்திச் செயல்பாட்டினை அபிவிருத்திச் செய்தல்
3. பொருளாதார பண்டங்ளுக்கான தீர்வு வரிச் சலுகையை பெற்றுக் கொடுத்தல்
4. அங்கத்துவ நாடுகளின் உள்நாட்டு பொருளாதார விருத்தியை விரைவுபடுத்தல்

38. கீழே தரப்பட்டுள்ள மக்கள் விருப்புக்கான வாக்கெடுப்புக்களுள் நேரடி சனநாயகப் பண்பினைத் தெளிவாகக் காணக்கூடிய தேர்தலாவது.

1. உள்ளூராட்சித் தேர்தல்
2. மாகாண சபைத் தேர்தல்
3. சனாதிபதித் தேர்தல்
4. மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு

39. கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் பாராளுமன்ற அரசியலமைப்பு பண்புகள் மாத்திரம் அமைந்துள்ள விடையாவது.

1. சட்டவாக்கத்துறையூடாக நிறைவேற்றுத் துறை தெரிவு செய்யப்படும்
2. சட்வாக்கத்துறை மூலம் நேரடி நிறைவேற்று ஆட்சிமுறை இடம்பெறாது.
3. சட்டவாக்கத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்குமிடையே நேரடி தொடர்பு இடம் பெறும்.
4. நிறைவேற்றுத் துறை சட்டவாக்கத்துறைக்கு நேரடியாக பொறுப்புக் கூற கட்டுப்பட்டதல்ல

1. A யும் D யும் 11. A யும் C யும் 111. B யும் C யும் 1V. B யும் D யும்

40. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினைகளுள் ஒன்றாவது.

1. மூளை சாலிகளின் வெளியேற்றம்
2. மூலதனக் குறைபாடு
3. தொழில் வாய்ப்பின்மை
4. வளப்பற்றாக்குறை

**கல்வி அமைச்சு.**
**தேசிய மொழிகள் மற்றும் மானிடவியல் பிரிவு.**
**க. பொ.த. ( சாதாரண / தரம் ) மாதிரி வினாப்பத்திரம் - 2016**
**குடியுரிமைக்கல்வி (62)**
**வினாப்பத்திரம் - II**

**நேரம் : 2 மணித்தியாலங்கள்**

- **முதலாம் வினா கட்டாயமானது. ஏனைய நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் 5 வினாக்களுக்கு விடை தருக.**

01. i. சனநாயக ஆட்சிமுறையின் பிரதான தன்மைகள் / பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.

ii. இலங்கையில் நடைமுறையிலுள்ள உள்ளுராட்சி நிறுவனங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

iii. பன்மைப் கலசார மக்கட் சமூகத்தின் மற்றும் நிலைப்பாட்டுக்கு பிரசை ஒருவரால் வளர்த்துக் கொள்ளக் கூடிய இரு பண்புகளைக் குறிப்பிடுக.

iv. பொருளாதாரத்தில் இடம்பெறும் முக்கிய நடவடிக்கைகள் இரண்டினை எழுதுக.

v. மோதல் ஏற்படுவதற்கு பங்களிப்புச் செய்யும் முக்கிய காரணிகள் இரண்டிணைப் பெயரிடுக.

vi. சுதேச சட்டங்களுள் இரு வகைகளைக் குறிப்பிடுக.

vii. இலங்கையின் தற்கால மத்திய அரசின் கட்டமைப்பில் உள்ள பிரதான பகுதிகள் இரண்டினைக் குறிப்பிடுக்

viii. சிறுவர் உரிமைகள் தொடர்பான பிரகடனத்திற்கு அடிப்படையாக அமைந்த அடிப்படைத் தத்துவங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

ix. மனிதனின் நிலைப்பாட்டிற்கு சூழலிலிருந்து கிடைக்கும் சேவைகளுள் இரண்டினை எழுதுக.

x. சர்வதேச தொடர்புகள் ஏற்படும் இரு பிரதான விடயங்களை பெயரிடுக.

(2 x 10 புள்ளிகள்)

02. “ **சனநாயக ஆட்சியானது மக்களின் விருப்புக்குரிய ஆட்சிமுறையாகும்** ”

I. நேரடி சனநாயகத்தை தற்காலத்தில் நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகள் இரண்டினைக் குறிப்பிடுக. ( 02 புள்ளி )

II. சனநாயக ஆட்சி முறையில் காணப்படும் முக்கிய பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக. ( 03 புள்ளி )

III. சனநாயக ஆட்சி வெற்றி பெறுவதற்குத் தேவையான பண்புகள் மூன்றினைக் கூறி அவற்றுள் ஒன்றை பற்றி விளக்குக. ( 05 புள்ளி )

03. “ **தற்கால உலகில் அதிகமான நாடுகளில் பன்மைப் கலாசார சமூகத்தை இனங்காண முடியும்** ”

I. பன்மைப் கலாசார சமூகம் தோன்றுவதற்கு ஏதுவான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. ( 02 புள்ளி )

II. அரச கொள்கைகளைத் தீர்மானிக்கும் போதும் நடைமுறைப்படுத்தும் போதும் “ **நல்லாட்சியில்** ”காணக்கூடிய முக்கிய பண்புகள் மூன்றினைத் தருக. ( 03 புள்ளி )

III. பன்மைப் கலாசார சமூகத்தில் மக்கள் ஒன்றிணைந்து செய்வதனால் பெற்றுக் கொள்ளக் கூடிய நன்மைகள் மூன்றினைக் கூறி அவற்றுள் ஒன்றை பற்றி விளக்குக. ( 05 புள்ளி )

04.“அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனையினைத் தீர்த்துக்கொள்வதற்காக சமுதாயம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள விதம் பொருளாதார முறை” என அழைக்கப்படும்.

I. கீழே தரப்பட்டுள்ள உற்பத்திக் காரணிகளுக்காகக் கொடுக்கப்படும் கொடுப்பனவுகளை முறையாகக் குறிப்பிடுக.

A–நிலம்

B–உழைப்பு (02 புள்ளி)

II. எந்தவொரு பொருளாதார முறையும் எதிர்நோக்க வேண்டிய அடிப்படைப் பொருளாதாரப் பிரசிசினைகள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளி)

III. கோளமயமாதலால் இலங்கைக்குக் கிடைத்துள்ள நன்மைகள் மூன்றினைக் கூறி அவற்றுள் ஒன்றை பற்றி விளக்குக. (05 புள்ளி)

05. “ஒரு மத்திய அரசின் மூலம் சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, மற்றும் நீதித்துறை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் அரசியலமைப்பே இலங்கையில் நடைமுறையிலுள்ளது”

1. 1947 ஆம் சோல்பரி அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் கீழ் இயங்கிய பாராளுமன்றத்தின் பிரதான இரு சபைகளைப் பெயரிடுக. (02 புள்ளி)

11. 1978 ஆம் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் கீழ் சனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரம் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளி)

111. அரசின் பல்வேறு படிநிலைகளின் பால் நாட்டின் பிரசையொருவரினால் செய்யவேண்டிய பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் என்பவற்றில் மூன்றினைக் கூறி அவற்றுள் ஒன்று பற்றி விளக்குக.

(05 புள்ளி)

06. “எந்தவொரு பிரசைக்கும் சமுதாயத்துள் கௌரவத்துடனும் சம அந்தஸ்துடனும் வாழ்வதற்கு மனித உரிமைகள் காரணமாகின்றன”

I. மனித உரிமைகளை வென்றெடுப்பது தொடர்பாக முக்கியத்துவம் பெறும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. ( 02 புள்ளி )

II. சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயம் தாபிக்கப்படும் போது அடிப்படையாகக் கொண்ட நோக்கங்கள் மூண்றினைக் குறிப்பிடுக. ( 03 புள்ளி )

III. இலங்கையில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதறகாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மூன்றினைக் கூறி அவற்றுள் ஒன்று பற்றி சுருக்கமாக விளக்குக. ( 05 புள்ளி )

07. “ **உயிர்களது நிலைப்பானது சூழலிலேயே தங்**கியுள்ளது.”

I. சூழலில் அமைந்துள்ள சூழல் தொகுதிகள் இரண்டினைப் பெயரிடுக?

(02 புள்ளி)

II. சூழல் பிரச்சினைகள் தோன்றுவதற்கு காரணமான மனித நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிடுக?

(03 புள்ளி)

III. சூழல் தொடர்பாக பிரசை யொருவரின் பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் மூன்றினைக் கூறி அவற்றுள் ஒன்று பற்றி விளக்குக?

(05 புள்ளி)